





OIPRD

சார்பாற்ற காவல்துறை மறுஆய்வு இயக்குனர் அலுவலகம்

# எங்களுடன் பேசுங்கள்



### புகார் படிவத்தை நிரப்புவதில் எனக்கு பிரச்சினை இருந்தால் என்ன செய்வது?

OIPRD-யை அணுகுவதில் உங்களுக்குப் பிரச்சினை இருந்தால், புகார் படிவத்தை நிரப்புவதில் நாங்கள் உங்களுக்கு உதவக்கூடும். எனினும், உங்கள் புகார் குறித்து எந்த ஆலோசனையும் எங்களால் கூற இயலாது. நீங்கள் உங்கள் புகார் பற்றி யாருடனாவது பேச விரும்பினால், பல சமூகக் குழுக்கள் மற்றும் சட்ட மையங்கள் உங்களுக்கு உதவியளிக்கக்கூடும். தயவு செய்து உங்கள் பகுதியில் உள்ள மையங்கள் மற்றும் சமூகக் குழுக்களின் பட்டியலுக்காக எங்களின் வலைதளத்தின் பயனுள்ள இணைப்புகள் (Useful Links) பகுதிக்கு வருகை தரவும்.

### எனது முதல் மொழி ஆங்கிலம்/∴பிரஞ்சாக இல்லாமல் இருந்தால் என்ன செய்வது?

OIPRD சேவைகளை ஆங்கிலம் மற்றும் ∴ பிரஞ்சு மொழிகளில் மட்டும் அளிக்கிறது. ஒரு புகாரைப் பதிவு செய்வதற்கு அல்லது OIPRD உடன் தொடர்புகொள்வதற்கு உங்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளரின் உதவி தேவைப்படும் என்றால், ஒருவரை நீங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். ஒரு மொழிபெயர்ப்பாளரை அறிவதற்கு எங்களின் வலைதளத்தின் பயனுள்ள இணைப்புகள் (Useful Links) பகுதிக்கு வருகை தரவும்.

### நான் எப்போது புகாரைப் பதிவு செய்யலாம் என்பதற்கு ஏதேனும் கால வரம்பு உள்ளதா?

புகார் பற்றிய சம்பவம் நடந்து **ஆறு மாதங்களுக்குள்** ஒரு புகார் தெரிவிக்கப்படவேண்டும்.

### ஒரு புகாரை பதிவு செய்ய ஒரு வழக்கறிஞர் எனக்கு தேவையா?

இல்லை. ஒரு புகாரைப் பதிவு செய்ய உங்களுக்கு ஒரு வழக்கறிஞரோ அல்லது வேறு எந்த வகையான பிரதிநிதியோ தேவையில்லை, ஆனால் உங்களுக்கு உதவுவதற்காக யாரேனும் ஒருவரைக் கேட்கலாம்.

### நான் பெயர் வெளியிடப்படாமல் ஒரு புகாரைப் பதிவு செய்ய முடியமா?

இல்லை, பெயர் வெளியிடப்படாத புகார்கள் ஏற்கப்படமாட்டாது. ஒரு நியாயமான மற்றும் ஊடுருவல் செயல்முறைக்கு, புகார் தருபவர்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு புகாரை சமர்ப்பிக்கும் போது OIPRD புகார் படிவத்தில் கையொப்பமிடவேண்டும்.



## சார்பாற்ற காவல்துறை மறுஆய்வு இயக்குனர் அலுவலகம் (OIPRD)

OIPRD என்பது ஒன்டாரியோ அட்டார்னி ஜெனரல் அமைச்சகத்தில் முற்றிலும் குடிமக்கள் மூலமாக நடத்தப்படும் ஒரு ஆர்ம்ஸ்-லென்த் முகமையாகும். எங்களின் முடிவுகள் சுதந்திரமானவை என்பதே இதன் பொருளாகும், மற்றும் நாங்கள் அரசாங்கம், காவல்துறை மற்றும் சமூகத்திலிருந்து வேறானவர்கள். ஒன்டாரியோ காவல்துறைக்கு எதிரான பொதுமக்களின் புகார்களை ஏற்று, செயல்முறைப்படுத்தி கண்காணிப்பதற்கான பாகுபாடற்ற சேவையை அளிப்பதுவே, OIPRD-இன் குறிக்கொள் ஆகும். சில நிகழ்வுகளில் நாங்களும் ஒரு புகாரை விசாரணை செய்வோம்.

ஊடுருவிய, நியாயமான, திறமையான மற்றும் ஆற்றலமிக்க வகையில் ஒன்டாரியோவில் காவல்துறைக்கு எதிரான புகார்கள் கையாளப்படுவதை OIPRD உறுதி செய்கிறது.

புகார்களைக் கையாள்வதற்கான தரங்கள் மற்றும் செயல்முறைகளை அமைப்பதன் மூலம் இதை நாங்கள் செய்கிறோம். ஒன்டாரியோ முழுவதும் பொதுமக்கள் புகார்கள் அமைப்பு நிலையாக இருப்பதை உறுதி செய்வதற்கு OIPRD மற்றும் காவல்துறை ஒரே தரங்கள் மற்றும் செயல்முறைகளைப் பின்பற்றுகின்றன.

## நான் எவ்வாறு எனது புகாரைப் பதிவு செய்வது?

நீங்கள் ஒரு அலுவலரின் நடத்தை, அல்லது சேவைகள் அல்லது எந்தவொரு முனிசிபலின் கொள்கைகள், ஒன்டாரியோவில் பிராந்திய அல்லது மாகாண காவல்துறை சேவை குறித்தப் புகாரை ஆங்கிலம் அல்லது ∴பிரஞ்சில் பதிவு செய்யலாம். அனைத்து புகார்களும் OIPRD புகார் படிவத்தில் இருக்க வேண்டும் மற்றும் புகார் அளிக்கும் நபரால் கையொப்பமிடப்பட வேண்டும்.

உங்கள் புகாரை OIPRD உடன் எங்கள் வலைதளத்திலோ, ∴பேக்ஸ் மூலமாகவோ அல்லது எங்கள் அலுவலகத்தில் நேரிலோ நீங்கள் பதிவு செய்யலாம். புகார் படிவங்கள் OIPRD, அனைத்து சர்வீஸ்ஒன்டாரியோ இடஅமைவுகள், அனைத்து காவல் நிலையங்கள் மற்றும் பல சமுதாய மையங்கள் மற்றும் சட்ட மைய்ஙகளில் கிடைக்கப் பெறுகின்றன.

OIPRD புகார் படிவத்தை நிரப்பி எந்தவொரு முனிசிபல், பிராந்திய அல்லது மாகாண காவல் நிலையத்திலும் நீங்கள் பதிவு செய்யலாம். காவல்துறை சேவை புகாரைப் பதிவு செய்து OIPRD-க்கு அதை அனுப்பி வைக்கும்.

தயவு செய்து எங்களின் படிப்படியான வழிகள்: எவ்வாறு காவல்துறைக்கு எதிரான புகார்களைத் தெரிவிப்பது என்ற தலைப்பிலான எங்களின் சிற்றேட்டை புகார் தெரிவிப்பது குறித்த விரிவான தகவளுக்கு ஆலோசிக்கவும்.

## முஜீசுனு மீதான மேலும் தகவல்களுக்கு தயவு செய்து வருகைதரவும்: www.oiprd.on.ca

எங்களைத் தபால் அல்லது நேரில் வருகைத் தருவதன் மூலம் தொடர்புகொள்வதற்கு:

Office of the Independent Police Review Director
(சார்பற்ற காவல்துறை மறுஆய்வு இயக்குனர் அலுவலகம்)
655 Bay Street, 10th Floor
Toronto, Ontario
M5G 2K4

**உங்களுக்கு மேலாக சேவை செய்வதற்கு எங்களுக்கு உதவுவதற்காக, நீங்கள் OIPRD-க்கு கடிதம் அனுப்புவதாக இருந்தால், தயவு செய்து பின்வருவனவற்றில் ஒன்றின் கவனத்திற்கு என்பதைக் குறிப்பிடவும்:**

- புகார்கள்
- மறுஆய்வுகள்
- உள்ளூர் தீர்வுகள்
- நிகழ்வு மேலாண்மை
- விசாரணைகள்
- மேலணுகல் மற்றும் கல்வி
- பொது விசாரணை
- தகவலைக் கோருவதற்கான சுதந்திரம்
- ஊடக உறவுகள்

பின்வருவனவற்றைப் பயன்படுத்தியும் நீங்கள் தொடர்புகொள்ளலாம் :

இலவசத் தொலைபேசி: **1-877-411-4773**
உள்ளூர் தொலைபேசி: **416-246-7071**
டிடிஒய்: **1-877-414-4773**
இலவச ∴பேக்ஸ்: **1-877-415-4773**
உள்ளூர் ∴பேக்ஸ்: **416-327-8332**
வலைத்தளம்: **www.oiprd.on.ca**

உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருக்கிறதா? எங்களின் வலைத்தளாத்தில் அடிக்கடிக் கேட்கப்படும் கேள்விகள் (FAQ) பக்கத்திற்கு வருகை தரவும் அல்லது **OIPRD@ontario.ca** -இல் எங்களைத் தொடர்பு கொள்ளவும். அனைத்துப் புகார்களும் OIPRD புகார் படிவத்தில் நிரப்பப்படவேண்டும்.

TAMIL